சுற்றறிக்கை இல. SEC/2015/02 2015.03.25

**வங்கிகள் /நிதி நிறுவனங்களுக்கான சுற்றறிக்கை**

## <u>வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களினால் செலுத்தப்படும் வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி</u>

(திருத்தப்படுகின்றவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 133 ஆம் பிரிவு)

மேற்படி சட்டத்தின் 133 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரயோகத்தினை வசதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு வங்கிக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான விளக்கவுரை குறிப்புக்கள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கொண்டுள்ள இந்த சுற்றறிக்கை தொகுப்பானது, எவரேனும் தனிநபர், பங்குடமை, கம்பனி அல்லது ஆட்கள் குழுமத்தினால் அத்தகைய வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் வைப்புச் செய்த அல்லது கொடுப்பனவு செய்த ஏதேனும் பணத்தொகை மீது செலுத்தத்தக்க வட்டியிலிருந்தான வருமான வரிக் கழிப்பனவுக்காக 2015 ஏப்ரல் 1 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் திருத்தப்படுகின்றது. (பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு)

### 1. கழிப்பனவு காலம்

வரியானது, வட்டி செலுத்தப்படுகின்ற அல்லது வைப்பாளரின் சார்பில் அல்லது அவருக்காக வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் பேணப்படுகின்ற ஏதேனுமொரு கணக்குக்கு வரவு வைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், அதிக பணத்தொகையினை கொண்டு வருபவருக்கு (பெயரினால் இனம் காணப்பட முடியாத) வழங்குவதாக உடன்பட்டு வைப்புச் சான்றிதழை வழங்கும் சந்தர்ப்பத்தில், (அதாவது முற்கூட்டிய கழிப்பனவு) வைப்பாளரினால் வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு செலுத்தப்படுகின்ற தொகைக்கு மேற்பட்ட மிகையிலிருந்து வரி கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

### 2. விலக்களிப்புக்கள் (வரிக் கழிப்பனவிலிருந்து)

மேற்குறித்த ஏற்பாடுகளின் கீழான வரிக் கழிப்பனவுத் தேவைப்பாடானது, பின்வரும் வட்டிகளுக்கு ஏற்புடையதல்ல.

(1) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிப்புப் பெறுகின்ற ஏதேனும் வட்டி.

<u>அத்தகைய விலக்களிப்புகள் குறிப்பாக பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றது:</u>

(அ) 2015 ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகி 2015 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைகின்ற காலப்பகுதிக்கு அல்லது 2015 ஏப்ரல் 1 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்கு, இலங்கை பிரஜையாகவும் இலங்கையில் வதிவினையும் கொண்டுள்ள தனிநபர் ஒருவர் 2015 ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகும் மற்றும் 2015 மார்ச் 31 ஆம் திகதி முடிவடையும் காலத்தினுள் அறுபது (60) வயதை பூர்த்தி செய்தவர் அல்லது அதற்கு மேற்பட்ட வயதையுடையவர் அல்லது 2015 ஏப்ரல் 1 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் வரி மதிப்பாண்டின் 1 ஆம் நாளன்று 59 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கின்ற யாரேனும் தனி நபருக்கு, பொதுமக்களிடமிருந்து வைப்புகளை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் வங்கி

அல்லது நிதி நிறுவனத்தில் பேணப்படுகின்ற யாதேனும் வைப்பிலிருந்து சேருகின்ற அல்லது எழுகின்ற வட்டி.

(ஆ) 2015 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக ஒரு சேமிப்புக் கணக்கு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சேமிப்புக் கணக்குகளைப் பேணி வருகின்ற எவரேனும் தனிநபர் அல்லது தரும தாபனத்திற்கு செலுத்தப்படும் வட்டியானது மாதமொன்றுக்கு ஐந்தாயிரத்துக்கு குறைவாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் சேருகின்ற அல்லது எழுகின்ற வட்டி.

இந்தப் பந்தியின் நோக்கத்திற்காக, "சேமிப்புக் கணக்குகள்" என்பது, பேணப்படுகின்ற வைப்புக்குரிய காலப்பகுதியில் தங்கியிராத வீதத்தில் வட்டியினைக் கொண்டிருக்கின்றதும் அதிலிருந்து பணத்தினை மீளப் பெறுகின்ற உரிமையினைப் பாதிக்கின்ற ஏதேனும் நிபந்தனைக்குட்படுகின்ற அல்லது நிபந்தனைக்குட்படாத கணக்கினைக் குறிக்கின்றது.

(இ) இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் ஏதேனும் வர்த்தக வங்கி அல்லது விசேட வங்கியில் அவரினால் அல்லது அவரின் சார்பில் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அவருக்கு வைப்பிலிடப்படுகின்ற பணத்தின் மீது எவரேனும் ஆளுக்கு சேருகின்ற வட்டி;
**(வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வதிவுள்ள வெளிநாட்டு நாணய கணக்குகள்)**

(ஈ) இலங்கைக்கு வெளியே நடாத்தப்படும் வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தின் மூலம் அவரினால் பெறப்படும் தொகைகளை இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் வர்த்தக வங்கியொன்றிலுள்ள விசேட கணக்கொன்றில் அவரினால் வைப்பிலிடப்படுகின்ற பணத்தின் மீது எவரேனும் ஆளுக்கு சேருகின்ற வட்டி.
**(விசேட கணக்குகள்)**

(உ) ஏதேனும் தரும தாபனமொன்றினால் பராமரிக்கப்படுகின்ற சிறுவர், முதியோர் அல்லது ஊனமுற்றோருக்கான இல்லமொன்றின் கவனமளித்தல் நோக்கத்திற்காக மட்டும் அவ்வரி பிரயோகிக்கப்படுகின்றது என அம்மதிப்பீட்டாண்டு வட்டி தொடர்பில் ஆணையாளர் நாயகத்திற்கு திருப்தி ஏற்படுமிடத்து, அத்தகைய ஏதேனும் தரும தாபனமொன்றிற்கு ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டில் சேருகின்ற வட்டி; **(இந்த விலக்களிப்பு தொடர்பாக அத்தகைய நிறுவனமானது தகைமை பெற்றுள்ளது என்பதனை வங்கி அல்லது நிதி நிறுவனம் திணைக்களத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றது)**

(ஊ) ஏதேனுமொரு வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவில் வெளிநாட்டு நாணயத்தில் அவரின் கணக்கில் வரவு வைக்கும் பணத்திலிருந்தான எவரேனும் ஆளுக்கு சேருகின்ற வட்டி.

(எ) ஏதேனும் பிணைகள் முதலீட்டு கணக்கில் வைப்பிலிடப்படும் ஏதேனும் பணத்திலிருந்தான எவரேனும் ஆளுக்கு சேருகின்ற வட்டி.

(II) (அ) இலங்கை அரசாங்கத்தின் திரட்டு நிதியம் அல்லது மாகாண சபையொன்றின் ஏதேனும் மாகாண சபை நிதியம்; அல்லது

(ஆ) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் **(அ), (இ), (ஈ), (எ), (ஏ) அல்லது (ஐ)** ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்திற்கு செலுத்தத்தக்க ஏதேனும் வட்டி.

(III) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 37 ஆம் பிரிவு (விதித்துரைக்கப்பட்ட நீண்ட கால கணக்குகள்) அல்லது பிரிவு 95 இன் கீழ் (தனிநபர் ஒருவருக்கு செலுத்தத்தக்க அத்தகைய வட்டி தவிர்ந்த இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களுக்கு செலுத்தத்தக்க வட்டி) கழிக்கப்பட வேண்டிய வரியிலிருந்தான யாதேனும் வட்டி.

## 3. வரிக் கழிப்பனவு வீதங்கள்

வட்டி வழங்குகின்ற அல்லது மூலக் கொடுப்பனவுக்கு மேற்பட்ட மிகையெனக் குறிப்பிடப்படும் (ஏதேனும் வைப்புச் சான்றிதழினைப் பொறுத்தவரையில்) யாதேனும் தொகைக்கு அனுமதிக்கின்ற ஒவ்வொரு வங்கியும் அல்லது நிதி நிறுவனமும் கீழ்வருமாறு (விலக்களிக்கப்பட்டாலன்றி) அந்த வட்டியில் அல்லது மிகையில் வருமான வரியைக் கழிப்பனவு செய்தல் வேண்டும்.

i. கம்பனியொன்றுக்கு செலுத்தப்படுகின்ற அல்லது வரவு வைக்கப்படுகின்ற ஏதேனும் வட்டியெனில், (ஏதேனும் தரும தாபனம் தவிர்ந்த) அத்தகைய வட்டி மீதான வரிக் கழிப்பனவுக்கு ஏற்புடையதான வீதம் 10% ஆகும்.

ii. ஏதேனும் வைப்புச் சான்றிதழின் பெறுமதி மீது (1 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு) அனுமதிக்கின்ற ஏதேனும் மிகையெனில், அத்தகைய மிகை மீதான வரிக் கழிப்பனவுக்கு ஏற்புடையதான வீதம் 10% ஆகும்.

iii. ஆட்கள் குழுமத்திற்கு (ஏதேனும் தரும தாபனம் தவிர்ந்த) செலுத்தப்படுகின்ற அல்லது வரவு வைக்கப்படுகின்ற ஏதேனும் வட்டியெனில், அத்தகைய வட்டி மீதான வரிக் கழிப்பனவுக்கு ஏற்புடைய வரி வீதம் 8% ஆகும்.

iv. இந்த வழிகாட்டலின் 2 ஆம் பந்தியின் விடயம் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபரொருவருக்கு (95 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குரித்துடைய இலங்கைக்கு வெளியேயுள்ள தனிநபர்கள் உள்ளடங்கலாக) அல்லது தரும தாபனமொன்றுக்கு அல்லது பங்குடமைக்கு செலுத்தப்படும் அல்லது வரவு வைக்கப்படும் ஏதேனும் வட்டியெனில், செலுத்தப்பட்ட அல்லது வரவு வைக்கப்பட்ட தொகையினைக் கருத்தில் கொள்ளாது ஒற்றை நிறுத்தி வைத்தல் வரி வீதமான 2.5% ஐப் பிரயோகித்தல் வேண்டும்.

குறிப்பு-

**(அ)** மேலே குறிப்பிடப்பட்டவாறு தனிநபர்கள் அல்லது தரும தாபனங்களுக்கு செலுத்தப்படுகின்ற அல்லது வரவு வைக்கப்படுகின்ற வட்டி மீது 2.5% ஒற்றை நிறுத்தி வைத்தல் வரியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **அத்தகைய தனிநபரினால் அல்லது தரும தாபனத்தினால் வட்டியைச் செலுத்துகின்ற அல்லது வரவு வைக்கின்ற வங்கிகளுக்கு அல்லது நிதி நிறுவனங்களுக்கு வெளிப்படுத்தலொன்றினை சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாடொன்று எழமாட்டாது.**

**(ஆ)** உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அல்லது அத்தகைய ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் (6 ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு), பிறப்பிக்கப்பட்ட பணிப்புரையெனில், கழிப்பனவானது அத்தகைய பணிப்புரைக்கமைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்துடன் ஆணையாளர்நாயகத்தினால் பிறப்பிக்கப்பட்ட அத்தகைய பணிப்புரைகள் பாதுகாப்பாக

பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் அவற்றினை ஆய்வு செய்வதற்காக (தேவைப்படின்) ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அவற்றினை கிடைக்கப் பெறச் செய்தல் வேண்டும்.

## 4. இணைந்த கணக்கு

வங்கி அல்லது நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்பாணைக்கமைவாக தனிநபர்களின் இணைந்த கணக்குகள் மீதான வட்டி அத்தகைய தனிநபர்களுக்கிடையே பகிரக்கூடியதுடன் மற்றும் அத்தகைய ஒவ்வொரு தனிநபருக்கும் பகிரப்பட்ட அத்தகைய வட்டியின் பகுதி அத்தகைய தனிநபருக்கு செலுத்தத்தக்க வட்டியாக் கருதப்பட முடியும்.

## 5. வரிக் கழிப்பனவு சான்றிதழ்

மேலே 3 ஆம் பந்திக்கமைவாக வருமான வரியினைக் கழிப்பனவு செய்கின்ற ஒவ்வொரு வங்கி அல்லது நிதி நிறுவனமும் கீழே குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கு அமைவாக ஒவ்வொரு வைப்பாளருக்கும் (தனிநபர், பங்குடமை, கம்பனி அல்லது ஆட்கள் குழுமம்) வரிக் கழிப்பனவுச் சான்றிதழ் ஒன்றினை ஒவ்வொரு கழிப்பனவு தொடர்பிலும் வழங்குமாறு கோரப்படுகின்றது.

**வரிக் கழிப்பனவுச் சான்றிதழ்**

வங்கி/நிதி நிறுவனத்தின் பெயரும் முகவரியும் ...........................................................................

வைப்பாளரின் பெயரும் முகவரியும் ...........................................................................................

வரி மதிப்பீட்டாண்டு ........................................................

(அ) வட்டியின் மொத்தத் தொகை ........................................

(ஆ) i வரி வீதம் ...............................

ii கழிப்பனவு செய்யப்பட்ட வரித்தொகை ..........................

.............................................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் ..............................................

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

திகதி ............................

குறிப்பு – கம்பனியல்லாத எவரேனும் ஆளின் ஏதேனும் வைப்பின் மீதான வட்டியிலிருந்து முறையாக மேற்கொள்ளப்படுகின்ற வரிக் கழிப்பனவு எனில், அத்தகைய வட்டி விதிப்பனவானது இறுதியானதாக இருக்கும்.

## 6. பணிப்புரை

வருமான வரி கழிக்கப்படும் வட்டி, வட்டி பெறுநரின் மதிப்பிடத்தக்க வருமானமாகும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பெறுநர் அந்த மதிப்பிடத்தக்க வருடத்திற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி, வங்கி / நிதி நிறுவனத்தினால் கழிக்கப்பட வேண்டிய வரியை விடக் குறைவு என நம்புவதற்கான காரணங்கள் இருக்குமாயின் வருமான வரியை கழிக்கும் பொழுது சீராக்கத்தை மேற்கொள்ளுமாறு வங்கிக்கு / நிதி நிறுவனத்திற்கு (ஆணையாளரிடமிருந்து (வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி) பெறத்தக்கதான பணிப்புரை விண்ணப்ப படிவத்தின் மீது) பிரகடனத்தை விநியோகிக்குமாறு ஆணையாளர் நாயகத்தினைக் கோர முடியும்.

வங்கி அல்லது நிதி நிறுவனமானது, ஆணையாளர் நாயகத்தின் அதிகாரத்தின் கீழ் அல்லது அவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் அத்தகைய பணிப்புரையினை மதித்து அதற்கமைவாகவே சீராக்கல்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 7. வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களினால் பேணப்பட வேண்டிய பதிவேடுகளும் அவற்றின் ஏனைய கடப்பாடுகளும்

ஒவ்வொரு வங்கியும் நிதி நிறுவனங்களும் –

- எவரேனும் ஆள் அல்லது பங்குடமை அல்லது ஆட்கள் குழுமத்திற்கு ஏதேனும் மதிப்பீட்டாண்டில் செலுத்தப்படக்கூடியதான மிகை வட்டிக்கு உரிய பொருத்தமான பதிவேட்டினைப் பேணுவதுடன் அத்தகைய வட்டி அல்லது மிகை வழங்கப்படுகின்ற திகதி அல்லது திகதிகள் பின்வரும் முறையில் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

வரி மதிப்பீட்டாண்டு:- ..........................................

(அ)

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|
| **தொடர் இல.** | **பெயரும் முகவரியும்** | **கணக்கு இலக்கம்** | **வைப்புத் தொகை** | **வைப்பின் வகை** | **வட்டி/ மிகை** | **வரி வீதம்** | **கழிக்கப்பட்ட வரி** |
| | | | | | | | |
| | | | | | | | |

(ஆ) பின்வரும் முறையில், இந்த வழிகாட்டுதலின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான கழிப்பனவுகளிலிருந்து விலக்களிப்பு பெற்றதன் காரணமாக கழிப்பனவு செய்யப்பட்டிருக்காத நிறுத்தி வைத்தல் வரி மீதான வட்டியினைப் பதிவு செய்க.

வரி மதிப்பீட்டாண்டு:- ..........................................

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| **தொடர் இல.** | **வைப்பின் வகை** | **கிளை குறியீடு** | **வட்டி பெறுநரின் பெயர்** | **தே.அ.அ.இல./ வ.செ.அ.இல.** | **செலுத்திய வட்டித் தொகை** | **விலக்களிப்புக்கான காரணம்** |
| | | | | | | |
| | | | | | | |
| **மொத்தம்** | | | | | | |

- மேற்குறித்த பதிவேடுகளை பரிசோதனை செய்வதற்காக ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட (எழுத்தில்) திணைக்கள அலுவலர்களுக்கு அனுமதியை வழங்குதல் வேண்டும்.

## 8. விபரத்திரட்டுக்கள் மற்றும் அட்டவணைகளை சமர்ப்பித்தல்

### விபரத்திரட்டு

2015 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர், வட்டி மீதான நிறுத்தி வைத்தல் பிரிவினூடாக வழங்கப்படுகின்ற கொடுப்பனவு சிட்டையினூடாக **204-1-001-8-0085128** எனும் இலக்கத்தினைக் கொண்ட மக்கள் வங்கிக் கணக்கிற்கு உரிய வரிக் கொடுப்பனவினை மாதாந்த அடிப்படையில் மேற்கொண்ட பின்னர் நிறுத்தி வைத்தல் வரிப் பிரிவினால் வழங்கப்படுகின்ற காலாண்டு விபரத் திரட்டுக்களை உரிய கொடுப்பனவு சிட்டையின் 3 ஆவது பிரதியுடன் உரிய காலாண்டின் முடிவினை உடனடுத்துவரும் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக நிறுத்தி வைத்தல் பிரிவில் (வட்டி மீது) சமர்ப்பித்தல் வேண்டும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் நிறுத்தி வைத்தல் பிரிவினால் (வட்டி மீது) வழங்கப்படுகின்ற விபரத்திரட்டின் போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்க. மேலும், ஏதேனும் செலுத்தத்தக்க வரி இல்லாதபோதிலும் விபரத்திரட்டானது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணைகள்**

2015.04.01 ஆம் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 133, 134 அல்லது 135 ஆம் பந்தியின் கீழ் கொடுப்பனவு செய்கின்ற அல்லது வரவு வைக்கப்படுகின்ற வட்டி அல்லது அனுமதிக்கப்பட்ட கழிப்பனவின் மீது அல்லது 160 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட யாதேனும் ஆண்டுத் தொகை, அரசுரிமைப் பணம், முகாமைத்துவக் கட்டணம் என்பவற்றின் மீது கழிக்கப்படும் நிறுத்தி வைத்தல் வரி அல்லது 157 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் வெகுமதிக் கொடுப்பனவுகள், குற்றப் பங்கு, லொத்தர் பரிசு, சூதாட்டத்திலிருந்தான வெற்றி அல்லது பந்தயத்திலிருந்தான வெற்றி அல்லது 36, 37, 38, 39, 95 மற்றும் 161(அ) எனும் பந்திகளின் கீழ் கழிப்பனவு செய்யப்படும் நிறுத்தி வைத்தல் வரிகளுக்கும் கீழ்வரும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்க.

**அட்டவணை 1**

**அரசாங்க பிணை முறிகள் மீதான நிறுத்தி வைத்தல் வரி**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| **தொடர் இல.** | **அரசாங்க பிணை முறிகளின் வகை** | **நிதி நிறுவனத்தின் பெயர்** | **நிறுத்தி வைத்தல் வரி தொகை (ரூபா)** | **கழிக்கப்பட்ட திகதி** |
| | | | | |
| **மொத்தம்** | | | | |

- இந்த அட்டவணையானது மத்திய வங்கியினால் மாத்திரம் சமர்ப்பிப்பிக்குமாறு கோரப்படுகின்றது.

**அட்டவணை 2**

**வைப்புக்கள் மற்றும் நிறுவன கடன் பிணை முறியிலிருந்தான நிறுத்தி வைத்தல் வரி**

தனிநபர்கள், பங்குடமைகைள் மற்றும் தரும தாபனங்களிலிருந்தான நிறுத்தி வைத்தல் வரி கம்பனிகள் மற்றும் கம்பனியல்லாத நிறுவனங்களிலிருந்தான நிறுத்தி வைத்தல் வரி நிறுவன கடன் பிணை முறிகள் மீதான நிறுத்தி வைத்தல் வரி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தொ.இல.** | **வைப்பு/பிணை முறியின் வகை** | **பெயர்** | **முகவரி** | **வ.செ.அ.இல.** | **கணக்கு இல/கடன் பிணை இலக்கம்** | **கிளை குறியீடு** | **வைப்பு/கடன் பிணை முறி ஆரம்ப திகதி (திதி/மாமா/ஆஆ)** | **முதிர்வுத் திகதி (திதி/மாமா/ஆஆ)** | **வைப்புத் தொகை/பெறுமதி (ரூபா)** | **வட்டி வீதம் (%)** | **செலுத்தத்தக்க/ செலுத்திய வட்டி (ரூபா)** | **நி.வை.வரி வீதம் (%)** | **நி.வை.வரி (ரூபா)** |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

- தனிநபர்கள், பங்குடமைகள், தரும தாபனங்கள், கம்பனிகள் மற்றும் ஏனைய அனைத்து நிறுவனங்களிலிருந்துமான வைப்புக்கள் மற்றும் நிறுவன கடன் முறிகள் மீதான நிறுத்தி வைத்தல் வரியானது, இந்த அட்டவணையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

## அட்டவணை 3

**விசேட ஏற்பாடுகளின் கீழான நிறுத்தி வைத்தல் வரி**

| |
|---|
| இலங்கைக்கு வெளியேயுள்ள ஆட்களிடமிருந்தான நிறுத்தி வைத்தல் வரி (95 ஆம் பிரிவு) |
| ஆண்டுக் கட்டணம் / அரசுரிமைப் பணம் /முகாமைத்துவக் கட்டணம் மீதான நிறுத்தி வைத்தல் வரி (160 ஆம் பிரிவு) |
| விசேட ஏற்பாடுகள் (36, 37, 38, 39, 161அ - ஆம் பிரிவுகள்) மற்றும் ஏனையவற்றின் கீழான நிறுத்தி வைத்தல் வரிக் கழிப்பனவு |
| பரிசளிப்புக்கள்/ குற்றப் பங்கு/ லொத்தர் பரிசு/பந்தயம் மற்றும் சூதாட்டம் மீதான நிறுத்தி வைத்தல் வரி (157 ஆம் பிரிவு) |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **தொடர் இல.** | **வகை/விபரணம்/ பிரிவு** | **பெயர்** | **முகவரி** | **தே.அ.அ.இல/ வ.செ.அ.இல/ கடவுச் சீட்டு இல.** | **கொடுப்பனவு/ நிகழ்வு/ஏல விற்பனைத் திகதி (திதி/மாமா/ஆ.ஆ)** | **பெறுமதி** | **நி.வை.வரி வீதம் (%)** | **நி.வை.வரி (ரூ.)** |
| | | | | | | | | |
| | | | | | | | | |

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 36,37,38,39,95,157,160 மற்றும் 161 அ பிரிவுகளின் கீழ் கழிப்பனவு செய்யப்பட்ட நிறுத்தி வைத்தல் வரியானது இந்த அட்டவணையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

## அட்டவணை 4

**நிறுத்தி வைத்தல் வரி விலக்களிப்புக்கள் தொடர்பான விபரங்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| **தொடர் இல.** | **வைப்பின் வகை** | **கிளை குறியீடு** | **வட்டி பெறுநரின் பெயர்** | **தே.அ.அ.இல. வ.செ.அ.இல.** | **செலுத்திய வட்டித் தொகை** | **விலக்களிப்புக் காரணம்** |
| | | | | | | |
| | | | | | | |
| **மொத்தம்** | | | | | | |

ஒவ்வொரு வங்கி அல்லது நிதி நிறுவனமும், வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கழிப்பனவுகள் தொடர்பில் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்ட அட்டவணைகள் உள்ளடங்கலான விபரத்திரட்டினை பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றது.

- 1 ஆவது காலாண்டு (ஏப்ரல், மே, ஜூன்) – ஜூலை 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக
- 2 ஆவது காலாண்டு (ஜூலை, ஆகஸ்ட், செப்ரெம்பர்) – ஒக்டோபர் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக
- 3 ஆவது காலாண்டு (ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர்) – ஜனவரி 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக
- 4 ஆவது காலாண்டு (ஜனவரி, பெப்ரவரி, மார்ச்) – ஏப்ரல் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக

**குறிப்பு: அட்டவணைகள் இலத்திரனியல் வடிவத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென கேட்கப்படுகின்றன. எவ்வாறாயினும், வரி செலுத்துனர்களின் எண்ணிக்கை 10 இலும் பார்க்க குறைவெனில், அச்சு வடிவிலும் சமர்ப்பிக்கலாம்.**

மேலும், விதித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக தேவைப்படுத்தப்பட்டாலன்றி,

- கழிக்கப்படுகின்ற நிறுத்தி வைத்தல் வரி மீதான தனிநபர்களின் வைப்புக்கள்; அத்துடன்
- கழிப்பனவு செய்யப்படாத நிறுத்தி வைத்தல் வரி மீதான சேமிப்புக் கணக்குகள்

தொடர்பில் அட்டவணைகளை அனுப்ப வேண்டிய தேவைப்பாடு எதுவுமில்லை.

## 9. பதிவு செய்தல் தேவைப்பாடு

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 150 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு வங்கி அல்லது நிதி நிறுவனமானது, வரி விபரத் திரட்டினை பூர்த்தி செய்வதற்கும் வரிக் கழிப்பனவினை மேற்கொள்ளுவதற்கும் 30 நாட்கள் முன்னதாக ஆணையாளர் (நிறுத்தி வைத்தல் வரி வட்டி மீதான), ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரிடமிருந்து பதிவு இலக்கத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்படுகின்றது.

**ஒப்பம் / கல்யாணி தஹநாயக்க**
**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**